அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
ANG MO KIO TAMIL METHODIST CHURCH

# ஞாயிறு ஆராதனை/ *Sunday Service*

**24th Sep 2023 9.30am**

✝ ஆராதனைக்கு அழைப்பு — திரு. கோவிந்தராஜு
Call to Worship — Mr.Govindaraju

இறை வணக்கப் பாடல் — பாடகர் குழு
Introit — Choir

ஜெபம் — திரு. கோவிந்தராஜு
Prayer — Mr.Govindaraju

✝ தொடக்கப் பாமாலை — சபையார்
Opening Hymn — Congregation

எப்போதும், இயேசு நாதா

1. எப்போதும், இயேசு நாதா,
உம்மைப் பின்பற்றுவேன்
என்றே தீர்மானமாக
நான் வாக்குக் கொடுத்தேன்;
நீர் என்னைத் தாங்கிக் காப்பீர்
அப்போது அஞ்சிடேன்;
முன்சென்று பாதை காட்டும்,
நான் வழி தவறேன்.

2. பூலோக இன்பம், செல்வம்
வீண் ஆசாபாசத்தால்
என் ஆத்துமா மயங்காமல்
தெய்வீக பலத்தால்
நீர் துணைநின்று தாங்கும்,
என் அருள் நாயகா;
தீங்கணுகாமல் காரும்,
மா வல்ல ரட்சகா.

3. ஆங்காரம் சுய சித்தம்
தகாத சிந்தையால்
மா கலக்கம் உண்டாகி
நான் தடுமாறினால்,
நீர் பேசும், அருள் நாதா,
கொந்தளிப்படங்கும்;
உம் நேச சத்தம் கேட்டு
என் ஆவி மகிழும்.

4. பின்பற்றினால் விண் வீட்டில்
பேரின்பம் பெறுவீர்,
என்றே உம் சீஷர் நோக்கி
நீர் வாக்கு அளித்தீர்;
அவ்வருள் வாக்கை நம்பி
இவ்வேழை அடியேன்,
இதோ, பின்செல்வேன், என்று
பிரதிக்னை பண்ணினேன்.

✝ மாறி மாறி வாசித்தல் 39ம் ஞாயிறு
தேவ ஆராதனை புத்தகம் — சபையார்
பக்கம் 68, சங்கீதம் 118
Psalter Reading –Page 68 Psalm 118 — Congregation

களிகூர்ந்து மகிழக்கடவோம்

✝ தந்தை போற்றி — சபையார்
Gloria Patri — Congregation

துதி ஆராதனை
Singspiration

ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம் — மறைதிரு. ஆல்பர்ட் விஜய் ஜோசப்
Thanksgiving & Pastoral Prayer — Rev. Albert Vijay Joseph

பரமண்டல ஜெபம் — சபையார்
Lord's Prayer — Congregation

சிறப்பு பாடல் — பாடகர் குழு
Special Song — Choir

மண்ணோர் மொழியில் பேசினாலும்

மண்ணோர் மொழியில் பேசினாலும்
விண்ணோர் மொழியில் பேசினாலும்
அன்பு எனக்குள் இல்லாவிட்டால்
ஒன்றுமில்லை நான் ஒன்றுமில்லை

1 அன்புக்கு சாந்தம் தயவுமுண்டு
அகந்தை பொறாமை ஏதுமில்லை
சினமடையாது, தீங்கு செய்யாது
தற்புகழில் மனம் மகிழ்ந்திடாது -
- மண்ணோர்

2 சத்தியத்தில் மகிழும், சகலமும் தாங்கும்
அநியாயம் தன்னில் சுகிக்காது
சகலமும் சகிக்கும், சகலமும் நம்பும்
சகல சத்தியமும் விசுவாசிக்கும்
-மண்ணோர்

3 தரிசனம் ஒழியும், பாஷைகள் ஓயும்
அறிவுகள் அனைத்தும் அழிந்து விடும்
குறைவான யாவும் ஒழிந்தே போகும்
நிறைவான அன்போ ஒழியாது
- மண்ணோர்

✝ காணிக்கை பாடல் — சபையார்
Offertory Song — Congregation

தந்தானைத் துதிப்போமே

பல்லவி

தந்தானைத் துதிப்போமே - திருச்
சபையாரே, கவி - பாடிப்பாடி.

அனுபல்லவி

விந்தையாய் நமக்கனந்தனந்தமான,
விள்ளற்கரியதோர் நன்மை மிக மிகத் - தந்தானை

சரணங்கள்

1. ஒய்யாரத்துச் சீயோனே - நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து,
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே, நாமும் - தந்தானை

2. கண்ணாரக் களித்தாயே - நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனா மாரிபோற் பெய்துமே - தந்தானை

3. சுத்தாங்கத்து நற்சபையே - உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தம்மின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம் - தந்தானை

4. தூரம் திரிந்த சீயோனே - உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி,
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை! - தந்தானை

5. சிங்காரக் கன்னிமாரே – உம்
அலங்காரக் கும்மி அடித்துப் படித்து
மங்காத உம் மணவாளன் இயேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும் – தந்தானை

✝ பூலோகத்தாரே யாவரும் — சபையார்
Doxology — Congregation

✝ திருமறைப் பாடம் மத்தேயு 20: 1-16 — திரு. எட்வின் மதுரம்
Scripture Reading : Matt 20: 1-16 — Mr. Edwin Mathuram

அருளுரை — மறைதிரு. ஆல்பர்ட் விஜய் ஜோசப்
Sermon — Rev. Albert Vijay Joseph

## Laborers in the Vinyard

✝ அர்ப்பணகீதம் — சபையார்
Offertory / Closing Song — Congregation

அன்பே பிரதானம்

பல்லவி

அன்பே பிரதானம், - சகோதர
அன்பே பிரதானம்.

சரணங்கள்

1 பண்புறு ஞானம், - பரம நம்பிக்கை,
இன்ப விஸ்வாசம் - இவைகளிலெல்லாம். - அன்பே

2 பலபல பாஷை படித்தறிந்தாலும்,
கலகல வென்னும் - கைம்மணியாமே. - அன்பே

3 என் பொருள் யாவும் - ஈந்தளித்தாலும்,
அன்பில்லையானால் - அதிற்பயனில்லை - அன்பே

4 துணிவுட னுடலைச் சுடக்கொடுத்தாலும்,
பணிய அன்பில்லால் - பயனதிலில்லை. - அன்பே

5 சாந்தமும் தயவும் சகல நற்குணமும்
போந்த சத்தியமும் - பொறுமையுமுள்ள. - அன்பே

6 புகழிறு மாப்பு, - பொழிவு பொறாமை,
பகைய நியாயப் - பாவமுஞ் செய்யா. - அன்பே

7 சினமடையாது, - தீங்கு முன்னாது,
தினமழியாது, - தீமை செய்யாது. - அன்பே

8 சகலமுந்தாங்கும், - சகலமும் நம்பும்,
மிகைபட வென்றும் - மேன்மை பெற்றோங்கும் - அன்பே

அறிவிப்புகள் — திரு. சாம்ராஜ் ஆசிர் ஜெயராஜ்
Announcements — Mr. Samraj Asir Jeyaraj

✝ முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்
Closing Prayer & Benediction

✝ ஆசீர்வாதப் பாடல்
Benediction Song

**கர்த்தரே, தற்காரும்**

1. கர்த்தரே, தற்காரும்,
ஆசீர்வாதம் தாரும்,
எங்கள் மேல் உம் முகத்தை
வைத்து, வீசும் ஒளியை.

2. எங்களுக்கன்றன்று
சமாதானம் தந்து
கிறிஸ்தைக் காட்டிப் போதிக்கும்
உமதாவியைக் கொடும்.

3. எங்கள் மீட்பரான
இயேசுவின் மேலான
நாமத்துக்கு மகிமை;
ஆமேன், கேட்பீர் ஜெபத்தை.

✝ *Indicates Congregation standing / சபையார் நிற்கவும்*

Birthday list
1. Mrs. Nanci Dhinakaran - 24th Sep
2. Mrs Milka Sathya - 25th Sep
3. Mrs Jayaseely Chandran - 27th Sep
4. Master Adrian Theophilus Isaac - 27th Sep
5. Ms. Karen David Naveen - 29th Sep
6. Ms. Grace Nesan 30-Sep

Wedding Anniversary list
1. Mr. Sathish Abraham & Mrs. Julie Sathish - 26th Sep
2. Mr. Noel Josephraj & Mrs. Mercy Noel - 28th Sep
3. Mr. Alfred Jayaprakash & Mrs. Ramya Alfred - 28th Sep